செ.வெ.எண்:127 நாள்:20.2.09

# செய்திக் குறிப்பு

## புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் பங்கேற்ற அலங்கார ஊர்திக்கு மூன்றாம் பரிசு

புதுடெல்லியில் ஆண்டுதோறும் ஜனவரி 26ஆம் நாள் குடியரசு நாள் விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் கொடியேற்றி வைத்து பங்குபெறும் இக்குடியரசு நாள் விழாவில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

இந்தியக் குடியரசை பறைசாற்றும் இப்பெருமை மிகு விழாவில் இந்தியக் கலாச்சாரம், பண்பாடு, கலை, ஆகியவைகளை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு மாநில கலை, நாட்டிய நிகழ்ச்சிகளுடன் அம்மாநிலங்களின் சிறப்பு, பண்பாடு, சுற்றுலாத்தலம், கலை ஆகியவைகளை வெளிப்படுத்தும் வண்ணம் அலங்கார ஊர்திகளும் வடிவமைக்கப்பட்டு பங்கேற்கும்.

இந்த ஆண்டு (2009) புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில் தமிழ்நாட்டு மக்களின் பண்பாட்டுடன் ஒன்றித் திளைத்த தெருக்கூத்து கலைநிகழ்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் அலங்கார ஊர்தி அணிவகுப்பில் பங்குபெற்று கலை நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது. தமிழ்நாட்டின் பண்பாட்டினை அழகுற காட்சிப்படுத்திய இந்த அலங்கார ஊர்தி, இந்திய பாதுகாப்புத் துறை தேர்வுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மூன்றாம் பரிசினை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பரிசினை மாண்புமிகு இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ஏ.கே. அந்தோனி, அவர்களிடமிருந்து தமிழ்நாடு அரசின் சார்பாக செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநரும், கூடுதல் செயலாளரும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநருமான முனைவர் ஆ.சி. மோகன்தாஸ், இ.ஆ.ப., அவர்கள் பெற்றுகொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் புதுடெல்லி தமிழ்நாடு இல்ல செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. முருகேசன் அவர்கள் மற்றும் தமிழக அரசின் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9